<u>**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**</u>

<u>**OS.No.**79/2021</u>

**Date:**09.11.2022 **PW.1**(அப்துல் காதர், த/பெ.வாவா ராவுத்தர்)

<u>**பிரதிவாதி தரப்பு கு.வி:**</u>

என் மகன் தமிழ்நாடு காவல்துறையில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவர் பெயர் பெரோஸ்கான் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்படும்போது அஜ்மீர் களஞ்சியம் என்பவரும் சேர்ந்து, பிரதிவாதியோடு கிரைய ஒப்பந்தம் போட்டுக்கொண்டதாகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும், 20 B1 ஆகும். அந்த சொத்து சிங்கம்புணரியில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தினை நான் சென்று பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். நான் எப்போது அவ்வாறு சென்று பார்த்தேன் என்றால் 2019-ம் ஆண்டு சென்று பார்த்துள்ளேன். தாவா கிரைய ஒப்பந்தம் வா.சா.ஆ.1 பதிவு செய்யப்பட்ட பின்னர் தாவா சொத்தினை சென்று பார்த்தேனா என்றால் இல்லை, அதற்கு முன்னரே சென்று பார்த்தேன். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்வதற்கு முன்னர் வில்லங்கச் சான்று வாங்கிப் பார்த்தேனா என்றால் ஆம். அந்த வில்லங்கச் சான்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 24.02.2021-ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பில் கண்டிருப்பது என்னுடைய கையொப்பம் என்றால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பு நான் தான் பிரதிவாதிக்கு அனுப்பச் சொன்னது என்றால் சரிதான். மேற்படி **வாதி அப்துல்காதரின் கையொப்பமுள்ள 24.02.2021-ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.1**-ஆக குறியீடு செய்து கொள்ளப்பட்டது. கிரைய ஒப்பந்தத்தில் என்னுடன் சேர்ந்து பிரதிவாதியுடன் ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்ட

அஜ்மீர் களஞ்சியமும் காவல் துறையில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த அஜ்மீர் களஞ்சியமும், என் மகன் பெரோஸ்கானும் நண்பர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 சம்மதப் பத்திரத்தை எனக்கு அஜ்மீர் களஞ்சியம் 23.04.2020-ம் தேதியன்று ஏற்படுத்திக்கொண்டதை குறிப்பாக என் சார்பில் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட 2 வழக்கறிஞர் அறிவிப்பிலும்(வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.1) குறிப்பாக சொல்லப்பட்டிருக்கவில்லை என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதி சக்திவேல் என் மீதும், என் மகன் பெரோஸ்கான் மற்றும்அவரின் நண்பர் அஜ்மீர் களஞ்சியம் மீதும் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். 24.08.2021-ம் தேதியன்று கொடுத்த புகாருக்கு நாங்கள் எல்லோரும் காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜரானோம் என்றால் சரிதான். அந்தப் புகாரில் அஜ்மீர் களஞ்சியத்திடம் ரூ.2,00,000/- மட்டுமே வாங்கியதாகவும், ஆனால் மிரட்டி தன்னிடம் கிரைய ஒப்பந்தத்தில் கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள் என சக்திவேல் சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். மேற்படி விசாரணைக்கு காவல் நிலையம் சென்று வந்த பின்னர் மறு விசாரணைக்கு வரச்சொல்லியிருந்த நிலையில் அவ்வாறு செல்வதற்கு முன்னரே இந்த வழக்கினைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த தாவா சம்மந்தமாக பிரதிவாதிக்கு எத்தனை முறை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் 2 முறை அனுப்பினேன். 19.06.2020-ம் தேதியிட்ட ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு 30.06.2020-ம் தேதியன்று அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதுபோன்று பி.வா.சா.ஆ.1-ல் 24.02.2021-ம் தேதியிட்டது என்றால் சரிதான். 03.07.2020-ம் தேதியன்று பிராதில் சொல்லப்பட்டுள்ள வழக்கறிஞர் அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா கிரைய ஒப்பந்தப் பத்திரத்தில்

குறிப்பாக எந்த தேதியில் பிரதிவாதிக்கு ரூ.10,00,000/- கொடுக்கப்பட்டது என குறிப்பாக சொல்லப்பட்டிருக்கவில்லை என்றால் சரிதான். 01.04.2017-ம் தேதிக்குப் பின்னர் ரூ.2,00,000/-த்திற்கு மேல் பணபரிவர்த்தனை இருப்பின் வங்கி மூலமே செலுத்தப்பட வேண்டுமென்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு அப்போது தெரியாது, அப்போது நான் நகையை அடமானம் வைத்து கொண்டு வந்த பணத்தை தான் ரொக்கமாகக் கொடுத்தேன். அவ்வாறு நகையை அடமானம் வைத்து பெற்றுக்கொண்ட பணத்தை பிரதிவாதிக்கு கொடுத்தேன் என குறிப்பாக பிராதில் சொல்லப்படவில்லை என்றும், அவ்வாறு நகையை அடமானம் வைத்ததற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால் நகையை அடமானம் வைத்ததற்கான ஆவணங்கள் என் வசம் வீட்டிலுள்ளது. அடுத்த முறை வரும்போது கொண்டுவருகிறேன். அவ்வாறு நகையை அடமானம் வைத்து எவ்வளவு ரூபாய் வாங்கினேன் என்றால் ரூ.4,00,000/-த்திற்கு நகையை அடமானம் வைத்தேன். சாட்சி கூடுதலாக ஏற்கனவே தான் ரூ.1,00,000/-ம் கையில் வைத்திருந்ததாகவும், மீதத் தொகையை அஜ்மீர் களஞ்சியத்திடம் கடனாக வாங்கியதாகவும், மேலும் தான் அதை அஜ்மீர் களஞ்சியத்திடம் பணத்தை திரும்பி கொடுத்துவிட்டதாகவும் சொன்னார். அஜ்மீர் களஞ்சியம் எனக்குத் தான் பணம் கொடுத்தார் என்றும், நேரடியாக பிரதிவாதியிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அஜ்மீர் களஞ்சியம் என்னிடம் தான் பணம் கொடுத்தார். நான் தான் பிரதிவாதியிடம் கொடுத்தேன். உண்மையிலேயே நான் சொன்ன மாதிரி நான் ரூ.10,00,000/-த்தை பிரதிவாதிக்கு கொடுத்திருந்தால் அஜ்மீர் களஞ்சியத்தை தாவா கிரைய ஒப்பந்தத்தில் பார்ட்டியாக சேர்த்திருக்க மாட்டோம் என்றால் சரியல்ல. அவர் ரூ.3,00,000/- கொடுத்திருந்ததால் அதற்கு ஆதாரமாக அவரும் பார்ட்டியாக

சேர்க்கப்பட்டிருக்கிறார். கடன் பரிவர்த்தனைக்காக இதுபோன்று ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வது செல்லாது என்றால் சரியல்ல. நானும், அஜ்மீர் களஞ்சியமும் 23.04.2020-ம் தேதியன்று ஏற்படுத்திக்கொண்ட சம்மதப் பத்திரம் பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். அந்த அஜ்மீர் களஞ்சியத்தை இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்த்திருக்கவில்லை என்றால் சரிதான். அஜ்மீர் களஞ்சியமும், நானும் இதுநாள்வரை சுமுக உறவிலேயே இருந்து வருகிறோம் என்றால் சரிதான். அவர் எனக்கு உறவினரும்கூட. அஜ்மீர் களஞ்சியம், பிரதிவாதிக்கு ஒரு செக் நோட்டீஸ் அனுப்பியது தெரியுமா என்றால் தெரியாது. அதில் ரூ.3,00,000/- பிரதிவாதி வாங்கினார் என்றும், அதில் ரூ.50,000/-த்தை திரும்ப செலுத்திவிட்டார் என்றும், பாக்கி ரூ.2,50,000/- கொடுக்க வேண்டும் என்று அந்த செக் நோட்டீஸில் சொல்லப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அவ்வாறு பிரதிவாதிக்கு அஜ்மீர் களஞ்சியம் கொடுத்த கடன் தொகைக்காகத் தான் அவரை மிரட்டி என் மகனும், அஜ்மீர் களஞ்சியமும் போலிசார் என்பதால் என்னையும் சேர்த்து தாவா கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதியை மிரட்டி கையொப்பம் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2-ல் கண்டுள்ளது போல் பிரதிவாதிக்கு நான் ரூ.7,00,000/-, அஜ்மீர் களஞ்சியம் ரூ.3,00,000/- உண்மையிலேயே கொடுக்கப்பட்டிருந்தால் அது குறித்து குறிப்பாக தாவா கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு சொல்லப்படாததால் வா.சா.ஆ.2-ல் கண்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மதிப்பு செண்ட் ஒன்றுக்கு ரூ.2,50,000/- இருக்கும் என்றால் சரியல்ல, செண்ட் ஒன்றுக்கு ரூ.2,00,000/- வரை இருக்கும். என் தரப்பில் அனுப்பப்பட்ட 3 வழக்கறிஞர்அறிவிப்புகளிலும் நான் பிரதிவாதிக்கு ரூ.7,00,000/- கொடுத்ததாகவும்,

அஜ்மீர் களஞ்சியம் ரூ.3,00,000/- கொடுத்ததாகவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அஜ்மீர் களஞ்சியம் காவல் துறையில் பணியாற்றுவதால் இவ்வழக்கை அவர் எதிர்கொள்ளமுடியாது என்பதாலேயே வா.சா.ஆ.2 எங்களுக்குள் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் 3 வழக்கறிஞர் அறிவிப்புகளை சுமார் 1 1/2 வருட காலத்தில் பல தேதிகளில் அனுப்பியிருக்கிறேன் என்றும், எங்கள் மீது போலிசாரிடம் புகார் கொடுப்பதற்கு முன்னர் வழக்குத் தாக்கல் செய்ய முன்வரவில்லை என்றும், பிரதிவாதி எங்கள் மீது போலிசில் புகார் கொடுத்த பின்னரே இந்த வழக்கினைத் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றும், வழக்கறிஞர் அலுவலகம் முகவரி மாறிவிட்டதால் அந்தப் தபால் பெறப்படாமலேயே திரும்ப வந்துவிட்டது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. தாவா கிரைய ஒப்பந்தத்தில் ரூ.10,10,000/- என கிரையத் தொகை பேசி முடிவாகி, ரூ.10,00,000/-த்தை பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்டபோதும், பாக்கி ரூ.10,000/-திற்கு 24 மாத கால அவகாசம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் கடனாக பெற்றதாலேயே அவ்வாறு 24 மாதம் என காலஅவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரூ.25,00,000/-த்திற்கு மேல் பெறுமான தாவா சொத்தினை ரூ.10,10,000/-த்திற்கு கிரையம் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும், கடனுக்கு பெயரளவில் ஆதரவாக ஏற்பட்டதாலேயே அவ்வாறு தாவா கிரைய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தம் சட்டப்படி செல்லாத சூழ்நிலையில் நான் கோரியவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும், நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.